தமிழ்ச் சிட்டு

விண்வரை புகழ்கொள்!

நீ, விரும் பாமல், உன்
  பிறவி நிகழ்ந்தது!
நீ, விரும் பாமல், உன்
  இறுதியும் நிகழும்!

இடையில் உன் வாழ்க்கை!
  எவரும் மதிக்கவும்,
கடைசி வரை உனைக்
  கருதவும் நிலை பெறு!

வியன் பிறர் கொள்ளவும்
  விரும்பவும் நடந்து கொள்!
பயனுடை வாழ்வாய்ப்
  பண்ணிக் கொள்க, நீ!

உனக்கு வாழ் வதினும்
  உலகுக்கு நீ, வாழ்!
மனக்குறை வின்றி
  மக்கட்குத் தொண்டு செய்!

உன் அறிவு பெரியது!
  உள்ளமும் இனியது!
வன்மையது உடலும்!
  அவற்றை வாழ வை!

காண்பவை அனைத்தும்
  கனவென்று நீ, நினை!
வீண்பகை யின்றி
  வெறுப்பின்றி நீ, இரு!

உன் மொழிக்கு நீ, உழை!
  உழை, உன் இனத்துக்கு!
தின்பதும் உடுப்பதும்
  திரிவதும் வாழ்வு இலை!

தலைவனாய் நீ வளர்!
  தறுதலை ஆகாதே!
விலையிலை உனக்கு!
  விண்வவரை புகழ்கொள்!

குரல் : 21
இசை : 7

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை:
உருபா : 1-50

தெரிந்து கொள்ளுங்கள்

- பாவேந்தர் கனகசுப்புரத்தினம் தம்மைப் 'பாரதிதாசன்' என்ற புனைபெயரில் அழைத்துக் கொண்டதைப் போல், பாரதியும் தம்மை ஷெல்லிதாசன் என்று அழைத்துக் கொண்டார்.

- 1981-இல் 68.4 கோடியாக இருந்த இந்தியாவின் மக்கள் தொகை, 1991-இல் 84.4 கோடியாகப் பெருகியிருக்கிறது. அஃதாவது ஆண்டுக்கு 2.14 விழுக்காடாக அது கூடி இருக்கிறது.

- இந்தியாவில் மக்கள் கருத்தடைக் கருவிகளை 35 விழுக்காட்டினரே பயன் படுத்துகின்றனர். பிற நாடுகளில் இப் பயன் படுத்தம் மிகக் கூடியிருக்கிறது. எடுத்துக் காட்டாக சீனாவில் 74 விழுக்காட்டினரும், இலங்கையில் 62 விழுக்காட்டினரும், தாய்லாந்தில் 66 விழுக்காட்டினரும், தென் கொரியாவில் 70 விழுக்காட்டினரும், மலேசியாவில் 51 விழுக்காட்டினரும் இக் கருவிகளைப் பயன் படுத்துகின்றனர்.

- "வேதங்களின் இறுதிப் பகுதியாகிய உபநிடதம் தமிழாசிரியரால் ஆரிய மொழியில் எழுதப் பெற்றது என்னும் உண்மை தெளிபொருளாய் நிலை நிறுத்தப் பட்டது. வேதாந்த சூத்திரம், சாங்கியம், நையாயிகம், வைசேடிகம் முதலியன எல்லாம் வகுத்து நுண்பொருள் பொதுள எழுதினார் தமிழாசிரியரே!" என்று மறைமலையடிகளார், தம் 'பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும்' என்னும் நூலில் (பக் 56) குறிப்பிடுகிறார்.

- உலக வியப்புகளின் ஒன்றான, இத்தாலியில் உள்ள பைசா நகரத்துக் கோபுரம் ஆண்டுக்கு 0.2 அ.மா. (மில்லி மீட்டர்) மேனி சாய்ந்து வருகிறதென்றும், இன்னும் 150 ஆண்டுகளில் அது தரைமட்டமாக் விழுந்து விடும் என்றும் கூறப் பெறுகிறது.

- தண்ணீர் அளவில் ஒரு டி.எம்.சி. என்பது 100 கோடி கன அடி தண்ணீரைக் குறிப்பதாகும்.

- தமிழில் தொல் பழங்காலந் தொட்டே முறையாக எழுந்த இலக்கிய இலக்கணங்கள் இருக்கின்றன. ஆனால் கன்னடத்தில் கி.பி.5, தெலுங்கில் கி.பி.11, மலையாளத்தில் கி.பி.13 ஆகிய நூற்றாண்டுகள் முதலே இலக்கியங்கள் தோன்றி வளரத் தலைப்பட்டன.

- திராவிட மொழிகளைத் திருந்திய மொழிகள் என்றும், திருந்தாத மொழிகள் என்றும் பகுத்துக் கூறுவர். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகு என்னும் ஆறு மொழிகளும் திருந்திய மொழிகளாகும். தோடா, கோடா, படகா, கோலமி, பார்சி, நாய்கி, கோந்தி, கட, குவி, கோண்டா, மால்டா, ஒரோவன், காட்பா முதலியன திருந்தாத மொழிகளாகும். மேலும், போடோசு, திமால், குமாவோன் ஆகிய மொழிகளையும், முண்டா மொழிகளையும், கொலேரிய இனமொழிகளையும் தமிழின மொழிகளாக, ஆட்சன் என்னும் அறிஞர் அடக்குவார்.

- தமிழ் நாட்டில் இதழ்கள் படிப்பவர்கள் குறைந்து வருகிற-

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்கு நல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்- 21] (தி.பி. 2022) மடங்கல் (செப்டம்பர் 91') [இசை-7

உடன்பாடும் முரண்பாடும்-4

இவ்வாறு, நம் அறிவுணர்வு, மனவுணர்வு, உடலுணர்வு, ஆகிய இம் மூன்று உணர்வுகளும் ஒன்றுபட்டு இயங்குகின்ற நிலையிலேயே, நாம் எண்ணுகின்ற எண்ணம் உறுதியாக அமைகின்றது; செயல் வலிவாக நிகழ்கின்றது; அறிவு தெளிவாக இயங்குகின்றது; உள்ளம் மகிழ்வாக இருக்கின்றது.

இப்படி இயங்காத நிலையில் நம் மனம் குழம்பும், அறிவு மயங்கும்; உடல் ஊக்கம் இழக்கும். சிற்சிலகால், நாம் ஒன்றைச் செய்யப் பிறரால் ஏவப்படும் பொழுது, நம் மனத்திற்கு அச் செயல் பொருந்தாமல் இருப்பதை அறியலாம். அல்லது அறிவுக்கு அச் செயல் உடன்பாடில்லாமல் இருப்பது போல் உணரவாம்; அல்லது நம் உடல் அச் செயல் செய்வதற்குப் பின் வாங்கலாம்; ஆனால் அதைச் செய்ய நம்மைப் பிறர் கட்டாயப் படுத்துகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது, நாம் அவர்களிடம், 'இதைச் செய்ய என் மனம் இடந்தரவில்லை' என்கிறோம்; அல்லது, 'இதைச் செய்வது என் அறிவுக்குச் சரியாகப் படவில்லை' என்கிறோம். அல்லது, 'இதைச் செய்வதற்கு இப்பொழுது என் உடல் நிலை பொருந்தி வரவில்லை' என்று சொல்லி விடுகின்றோம்; இந்த நிலைகளில் பிறர்க்கும் நாம் முரண்படுகிறோம்; நமக்கும் நாமே முரண்படுகின்றோம்—என்பதையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்;

எனவே, ஒரு செயலைச் செய்வதற்கு நம் மூன்று உணர்வுகளும் ஒத்து உடன்பட்டுப் போதல் வேண்டும். அப் பொழுதுதான் அச் செயலைச் செய்ய நமக்கு விருப்பம் வரும்; துணிவு பிறக்கும்; அதைச் செய்யும் தெளிவும் நமக்கு உண்டாகும்; உடலிலும் ஊக்கம் தோன்றும். அப்பொழுதான் நாம் முவ்வுரத்துடன்-மும்முரத்துடன்-அச் செயலில் ஈடுபட முடியும். இந்த நிலையல்லாமல் நமக்கு நாமே முரண்படுவதானாலும், அல்லது பிறர்க்கு நாம் முரண்பாடு கொள்வதானாலும் அச் செயலை நாம் செய்யும் துணிவு தோன்றாது.

எஃது எப்படியேனும் உடன்பாடும் முரண்பாடும் எதிரெதிரான இரண்டு உணர்வுகள் என்பதையும், அது நமக்குள்ளும் பிறர்க்குள்ளும் தோன்றி எந் நிலையிலும் எவ் விடத்தும் வெளிப்படலாம் என்பதையும் நாம் நன்கு தெளிவுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

இனி, இவ்விரண்டு உணர்வுகளும் நமக்குள் தோன்றும் பொழுது, அவற்றுள் ஓர் உணர்வைச் சிலர் நம் மனச்சான்று (மனச் சாட்சி) என்று கூறுவர். ஆனல், நுட்பமாக நோக்குகின்ற பொழுது 'மனச் சான்று' என்பது வேறு; நமக்குள் தோன்றும் முரண்பாடு என்பது வேறு என்பதையும் நாம் நன்கு வேறு பிரித்து உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

ஒரு செயலை நாம் துணியும் பொழுது, முதலில் அஃது அறிவால் ஏற்பட்ட துணிவா, அன்றி மனத்தால் ஏற்பட்ட துணிவா, அதுவுமன்றி உடல் வலிவால், நலத்தால் ஏற்பட்ட துணிவா என்பதையும் நாம் தெளிவுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

இவ் விடத்தில் இன்னொன்றையும் நாம் தெளிவு படுத்திக் கொள்ளுவது, நாம் இக் கருத்தை முழுமையாக உணர்ந்து கொள்வதற்குத் துணை செய்யும்.

எப்பொழுதுமே நம் மனத்துணிவு ஆசையினல் தோன்றும்; ஆசைக்குத் தன்னலம் அடிப்படை. எனவே நாம் நம் தனிநல நோக்கில் மட்டும் எண்ணம் கொண்டு ஒரு செயலைச் செய்யத் துணிகின்றேம் என்றல், அதற்கு அச் செயலால் கிடைக்கும் பயன் மேல் கொண்ட ஆசையே காரணமாக இருத்தல் முடியும். ஆசை மனவுணர்வை மட்டும் அடிப்படையாகக் கொண்டது. எனவே, அவ் வாசையை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டே மனம் துணிவு கொள்ளுகிறது.

இனி, ஒரு செயலைச் செய்வதற்கு அறிவு துணிவு கொள்ளுகிறது என்று கொண்டால், அது தேவையினல் ஏற்பட்ட துணிவாக இருக்கலாம். ஒருவர்க்கு ஒரு பொருள் அல்லது ஒரு விளைவு தேவைப்படுகிறது என்று வைத்துக் கொள்ளலாம். அந்தப் பொருள் தேவையை அறிவு உணர்ந்து கொண்டு, அதன் மேல் நாட்டத்தையும் அதனடிப் படையில் துணிவையும் நமக்குக் கொடுக்கிறது.

இவ் விரண்டு உணர்வுகளையும் ஓர் எடுத்துக் காட்டின் வழியாக நாம் வேறுபடுத்தி அறிந்து கொள்வோம்;

நாம் நம் பணியிடத்திற்குச் சென்று வர நமக்கு ஒரு மிதி வண்டி தேவைப் படுவதாக வைத்துக் கொள்வோம். இத் தேவையை அறிவினால் நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமானால், நம் கையிலுள்ள பணத்தைக் கொண்டு ஒரு மிதி வண்டி வாங்க விரும்புவோம். நம் கையில் பணம் இல்லையானால், பிறரிடம் கடன் வாங்கியேனும் மிதிவண்டி வாங்கி விட்டுப் பிறகு நமக்குற்ற கடனை நம் வருவாயைக் கொண்டு சிறிது சிறிதாக, அடைத்து நிறைவு செய்வோம். இது முற்றிலும் அறிவின் பாற்பட்ட செயல்! இதன் வழியாகத் துணிவு கொண்டுதான் கடன் வாங்கியாகிலும் மிதி வண்டி வாங்க முற்படுகிறோம்.

ஆனால், நம்மிடம் மிதி வண்டி வாங்கப் பணம் இல்லை; அதே பொழுது நமக்கு ஒருவரும் கடன் கொடுக்கவும் முன் வரவில்லை, என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது எவ்வாறேனும் நமக்கு மிதி வண்டி தேவையென்றாலும், நம்மிடம் அதை வாங்கப் பணம் இல்லையென்றாலும், பிறரும் நம்மை நம்பாமலோ அல்லது அவர்களிடம் இல்லாமையாலோ கடன் கொடுக்கவில்லையென்றாலும், நம் தேவையை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் அறிவு அமைந்து விடுகிறது; துணிவு ஏதும் கொள்வதில்லை. ஆனால், நம் மனம மட்டும் அத் தேவையை ஆசையாக மாற்றுகிறது. அதனால் மிதி வண்டி தேவை என்னும் உணர்வு மாறி, எப்படியாகிலும் அது வேண்டும் என்று மனம் அவாவுகிறது; ஆசை கொள்ளுகிறது. அதனால் எவ்வாறேனும், அண்டை அயல் ஊர் சென்றாவது, ஒரு மிதி வண்டியைத் திருடி கொண்டு வந்து விட மனம் எண்ணுகிறது என்று வைத்துக் கொள்வோம். இதுவே ஆசை. அஃதாவது நம் தேவையை அறிவு வழியில் பெறமுடியாமல், மன வழியில், நேர்மையல்லாத முறையில் நிறைவேற்றிக் கொள்ளுவது. அப் பொழுது அது பிறர்க்குரியது என்று நினையாமல் தன்னல நோக்கினால், அதை நமக்குரியதாக ஆக்கிக் கொள்ள மனம் எண்ணுகிறது. இது தான் ஆசையின் வடிவம். அஃதாவது நமக்கு வேண்டும் என்று தேவையின் அடிப்படையில் எண்ணுவது, நிறைவேற்றுவது அறிவு. அதை எப்படியேனும், தவறான வழியில் சென்றேனும், அடைந்து விட வேண்டும் என்று நினைப்பது, அதைச் செய்யத் துணிவது ஆசை.

எனவே, ஒரு செயலுக்கான துணிவு அறிவின் பாற் பட்டதா, மனத்தின் பாற் பட்டதா என்று நாம் பிரித்துணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இவ் விடத்தில், ஆசையின் அடிப்படையில் ஒன்றைத் தவறான வழியில் செய்ய முற்படும் பொழுது, அத் தேவையை முன்னரே உணர்ந்த அறிவு, நம் மனத் துணிவைக் கண்டிக்கும். இதைத்தான் ஒரு வகையில் நாம் மனச் சான்று என்றும் கூறுகிறோம்; ஆனால் மனச் சான்று என்பதற்கான முழு வடிவமும் இதுவன்று.

ஒரு செயலை நாம் தவறான நோக்கத்துடன், தவறான நோக்கத்திற்காக, தவறான வழியில் சென்று நிறைவேற்றிக் கொள்ள

விரும்புகிறோம்: இது, நம் ஆசையின் துணிவு. ஆனால் அந்தச் செயலை நாம் நல்ல நோக்கத்துடன் செய்வதாகப் பிறர் நம்பும் படி சொல்கிறோம். அங்கு தான் நம் மனமே நமக்குச் சான்றாக அமைகிறது. நாம் ஒன்றை நினைத்துக் கொண்டு, வேறொரு செயலை நாம் வெளியில் உள்ளவர்களுக்குச் செய்து காட்டுகிறோம். இவ்வாறு மனம் வேறு, செயல்—வினை—வேறாக இயங்கும் பொழுது தான், நம் மனமே நமக்கு உண்மைச் சான்றாக இருக்கிறது. இதுவே மனச்சான்று. இதற்கு மாறாக நாம் நடக்கும் பொழுது தான், நாம் நம் மனச் சான்றுக்கு மாறாக நடக்கிறோம் என்று பொருளாகிறது. இப்படி மனச் சான்றை மதியாதவர்களுடன், அல்லது மனச்சான்றுக்கு மாறாக இயங்குபவர்களுடன் நாம் கனவிலும் தொடர்பு கொள்ளக் கூடாது; அவர்களால் நமக்கு என்றும் துன்பமே என்று திருக்குறள் நமக்கு அறிவுறுத்துகிறது.

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. —819

முன்பு காட்டப் பெற்ற மிதி வண்டி எடுத்துக்காட்டில், அதைத் தவறான வழியில் பெற மனம் துணிவு கொள்வதை அறிவு தடுத்துக் கூறும் உணர்வை நாம் மதித்தல் வேண்டும். ஆசையின் பாற் பட்ட துணிவு தீங்கு தருவது; துன்பம் தருவது. அதனால் அதை அறிவு தடுக்கிறது. இவ்வாறு மனம் குருடாக உள்ள பொழுது அறிவு விழிப்பாக இயங்குதல் வேண்டும். அதுதான் அறிவுக்கு இலக்கணம்; அதுதான் அதற்கு அழகு.

சென்ற விடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு. —622

—என்னும் திருக்குறளில் இவ்வுணர்வு விளக்கப் பெறுகிறது.

இனி, மனம், அறிவு என்னும் இரண்டு இயற்கை உணர்வுகளுக்கும் வேறாக, உடல் நலத்துடனும் வளத்துடனும் உள்ள ஒருவர், உடல் வலிவினால் மட்டும் ஊக்கம் பெற்று, ஒரு செயலைச் செய்யத் துணிவு கொள்ளலாம்: இக்கால், அச் செயலை மனத் துணிவினால் செய்ய முற்பட்டோமா, அறிவுத் துணிவினால் செய்ய முற்பட்டோமா, அல்லது வெறும் உடல் வலிவினால் மட்டும் செய்ய முற்பட்டோமா— என்றவாறு பிரித்து உணரவும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். வெறும் உடல் துணிவினால் மட்டும் ஒரு செயலைச் செய்ய நாம் முற்படுவதாக வைத்துக் கொள்வோம்: அக் கால் நம் உடலை விட வலிவில் மிக்க ஒருவர் நம்மை முறியடித்து, அதைச் செய்யவிடாது நம்மைத் தடுத்து விட்டு, அவர் செய்து விடலாம். எனவே, மனம் துணியாமல், அறிவும் துணியாமல், வெறும் உடல் துணிவினால் மட்டும் ஒரு செயலைச் செய்ய நாம் முற்பட்டு விடுதல் கூடாது. இவை யெல்லாம் நம்முடைய உடன்பாட்டையும் அதற் கெதிரான முரண்பாட்டையும் நாமே விளங்கிக் கொள்வதற்கு உதவுவதாகும்—என்று அறிந்து கொள்க.

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

உலக நாடுகளைத் தெரிந்து கொள்ளுங்கள்!

1. மக்கள் வாழ்கின்ற பெரு நிலப் பகுதிகள் (கண்டங்கள்)--6

1. ஐரோப்பா 2. ஆசியா 3. ஆப்பிரிக்கா
4. வட அமெரிக்கா 5. தென் அமெரிக்கா
6. ஆசுத்ரேலியா.

2. ஐரோப்பிய நாடுகள் :- 36.

1. ஐசுலாந்து (Iceland)-குடியரசு

நிலப்பரப்பு : 1,02,819 ச.அ.மா (ச.கி.மீ)
மக்கள் தொகை : 2,40,000
மக்கள் தொகைப் பெருக்கம் ஆண்டுக்கு : 11·/.
மக்கள் வாழ்வு எல்லை (சராசரி) : ஆண்கள் 73 ஆண்டு
பெண்கள் 79 ஆண்டு
எழுத்தறிவு : 99.9·/.
தலைநகர் : இரெய்க்சவிக் (Reykjavik)
மொழி : ஐசுலாண்டிக்
நாணயம் : குரோனு

2. நார்வே (Norway)—முடியரசு

நிலப்பரப்பு : 3,86,974 ச.அ.மா. (ச.கி.மீ)
மக்கள் தொகை : 41,30,000.
மக்கள் தொகை பெருக்கம் (ஆண்டுக்கு) 0.4·/.
மக்கள் வாழ்வு எல்லை : ஆண் : 72 ஆண்டு
பெண் : 78 ஆண்டு
எழுத்தறிவு : 99·/.
தலைநகர் : ஒசலோ (Oslo)
மொழி : நார்வேயன்
நாணயம் : நார்வேயன் குரோன்

(முன் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறாக, இது வரை கூறப் பெற்ற விளக்கங்களால், நமக்குள்ளும் நம்மைச் சார்ந்து இயங்குபவர்களிடத்திலும், நமக்கு நேரடியாகவே எதிராக இயங்குபவர்களிடத்திலும், ஏற்படுகின்ற உடன்பாட்டு உணர்வுகளையும், முரண்பாட்டு உணர்வுகளையும் ஒருவாறு விரித்தும் விளக்கியும், தொகுத்தும் பகுத்தும் கூறினோம். இவ் விளக்கங்களைக் கொண்டு நாம் எந்தச் செயலையும் முன் எச்சரிக்கையுடன் செய்ய முற்படுவோமானால், எந்த எதிர்ப்புக்கும், வேறுபாட்டிற்கும் நாம் தயங்கவோ மயங்கவோ வேண்டியதில்லை என்பதைத் திண்ணமாய் உணர்ந்து கொள்க. (முற்றும்)

3. சுவீடன் (Sweden)—முடியரசு

நிலப்பரப்பு : 4,49,964 ச.அ.மா
மக்கள் தொகை : 83,50,000
மக்கள் தொகைப் பெருக்கம் (ஆண்டுக்கு) : 0.2%.
மக்கள் வாழ்வு எல்லை : ஆண் : 72 ஆண்டு
பெண் : 79 ஆண்டு
எழுத்தறிவு : 99%.
தலைநகர் : இசுடாக் ஓம் (Stockholm)
மொழி : சுவீடிசு
நாணயம் : ஓர் (Ore)

4. பின்லாந்து (Finland)—குடியரசு

நிலப்பரப்பு : 3,37,032 ச.அ.மா.
மக்கள் தொகை : 48,70,000
மக்கள் தொகைப் பெருக்கம் ஆண்டுக்கு : 0.6%
மக்கள் வாழ்வு எல்லை : ஆண் : 69 ஆண்டு
பெண் : 77 ஆண்டு
எழுத்தறிவு : 99%.
தலைநகர் : எல்சிங்கி (Helsinghi)
மொழி : பின்னீசு, சுவீடீசு.
நாணயம் : மார்க்கு

5. அயர்லாந்து குடியரசு (Republic of Ireland)

நிலப்பரப்பு 70,283 ச. அ. மா.
மக்கள் தொகை : 34,40,000
மக்கள் தொகைப் பெருக்கம் ஆண்டுக்கு, 1.1%
மக்கள் வாழ்வு எல்லை : ஆண் : 70 ஆண்டு
பெண் : 75 ஆண்டு
எழுத்தறிவு : 99%.
தலைநகர் : டப்ளின் (Dublin)
மொழி : ஐரிசு, ஆங்கிலம்
நாணயம் : ஐரிசு பவுண்டு

6. வட அயர்லாந்து (Northern Ireland)
(இங்கிலாந்து ஆளுகை)

நிலப்பரப்பு : 2,44,104 ச.அ.மா.
மக்கள் தொகை : 5,87,80,000
மக்கள் தொகைப் பெருக்கம் ஆண்டுக்கு : 0.1%
மக்கள் வாழ்வு எல்லை : ஆண் : 70 ஆண்டு
பெண் : 76 ஆண்டு
எழுத்தறிவு : 99%
தலைநகர் : இலண்டன்
மொழி : ஆங்கிலம்
நாணயம் : பிரிட்டிசு பவுண்டு

7. டென்மார்க்கு (Denmark)-முடியரசு

நிலப்பரப்பு : 43,069 ச.அ.மா.
மக்கள் தொகை : 51,12,000
மக்கள் தொகைப் பெருக்கம் ஆண்டுக்கு : 0.2·/.
மக்கள் வாழ்வு எல்லை : ஆண் : 71 ஆண்டு
பெண் : 77 ஆண்டு
எழுத்தறிவு : 99·/.
தலைநகர் : கோபன்ஏவன் (Kobenhavn)
மொழி : டேனிசு (Denish)
நாணயம் : டேனிசு குரோன்

8. சோவியத்து ஒன்றியக் குடியரசு (Union of Soviet Socialist Republics) (உருசியாவின் ஐரோப்பியப் பகுதி)

நிலப்பரப்பு : 2,24,02,200 ச.அ.மா. (இக்கால் நிலைகள் மாறியுள்ளன.)
மக்கள் தொகை : 27,63,00,000
மக்கள் தொகைப் பெருக்கம் ஆண்டுக்கு : 0·9·/.
மக்கள் வாழ்வு எல்லை : ஆண் : 65 ஆண்டு
பெண் : 74 ஆண்டு
எழுத்தறிவு : 99·/.
தலைநகர் : மாசுகோ (Moscow)
மொழி : சிலாவிக் (உருசியன், உக்ரேனியன், பைலோ-ருசியன், போலிசு) அல்டாயிக் (டர்கிசு முதலிய) பிற இந்தோ-ஐரோப்பியன், உரேனியன், காகேசியன்)
நாணயம் : ரூபிள்

9. நெதர்லாந்து (Netherlands)-முடியரசு

நிலப்பரப்பு : 41,548 ச.அ.மா.
மக்கள் தொகை : 1,43,95,000
மக்கள் தொகைப் பெருக்கம் ஆண்டுக்கு : 0.6·/.
மக்கள் வாழ்வு எல்லை : ஆண் : 72 ஆண்டு
பெண் : 78 ஆண்டு
எழுத்தறிவு : 99·/.
தலை நகர் : அம்சுட்டர்டாம் (Amsterdam)
மொழி : டச்சு
நாணயம் : கில்டெர் (Guilder)

10. கிழக்கு ஜெர்மனி (Federal Republic of German)

(பொதுவுடைமை)
நிலப்பரப்பு : 2,48.687 ச.அ.மா.
மக்கள் தொகை : 6,14,20,000
மக்கள் தொகைப் பெருக்கம் ஆண்டுக்கு : 0.3%
மக்கள் வாழ்வு எல்லை : ஆண் : 69 ஆண்டு
பெண் : 75 ஆண்டு

எழுத்தறிவு : 99
தலை நகர் : போன் (Bonn)
மொழி : செர்மன்
நாணயம் : டி. மார்க்

11. மேற்கு செருமனி (German democratic republic) குடியரசு

நிலப்பரப்பு : 1,08,333 ச.அ.மா.
மக்கள் தொகை : 1,67,00,000
மக்கள் தொகைப் பெருக்கம் ஆண்டுக்கு : 0%
மக்கள் வாழ்வு எல்லை : ஆண் : 69 ஆண்டு
பெண் : 75 ஆண்டு
எழுத்தறிவு : 99%
தலைநகர் : பெர்லின்
மொழி : செர்மன்
நாணயம் : மார்க்
(சென்ற ஆண்டில் இரண்டு செருமனிகளும் இணைந்து ஒரே நாடாக ஆகி விட்டன)

12. போலந்து (POLAND) – குடியரசு.

நிலப்பரப்பு : 3,12,683 ச.அ.மா.
மக்கள் தொகை : 3,64,00,000
மக்கள் தொகைப் பெருக்கம் ஆண்டுக்கு : 1.0%
மக்கள் வாழ்வு எல்லை ஆண்: 67 ஆண்டு. பெண் : 75 ஆண்டு
எழுத்தறிவு : 98%
தலைநகர் : போலிஷ். (Polish)
நாணயம் : ஜியோட்டி.

(தொடரும்)

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

ஓ! ஓ! தமிழர்களே!

கடந்த 17-2-91-இல் ஈரோட்டில் நடந்த உ.த.மு.க. இரண்டாவது மாநாட்டில் ஆசிரியர் செய்த அரிய சிறப்புச் சொற்பொழிவு நூல்!

வெள்ளைத் தாள் பதிப்பு : 9-00
செய்தியச்சுத் தாள் பதிப்பு: 6-50

இஃது ஒரு புதிய வெளியீடு. பதிவுக்கொடுப்பு அஞ்சல்செலவு: 3-00

தென்மொழி, சென்னை-5.

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். — அமைச்சர்

நாம் வாழும் பெரும்புடவி! (பிரபஞ்சம்)

இப் பெரும்புடவிக்கிடையில் நாம் வாழும் இந் நிலவுலகத்தைப் பற்றியும் சிறிது சிந்திக்க வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்!

எல்லாக் காலங்களிலும் பாவலர்களும் ஓவியர்களும் நாம் வாழும் இவ்வுலகம் முழு நிறைவாக அமைந்துள்ளதை உணர்ந்தனர். இங்கு ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய இணக்கத்தைக் காட்டுகின்றன 'உலகமே! உன்னை எவ்வாறு புகழ்வது என்று தெரியவில்லை உன்னுடைய உயர்தரமான தன்மைகளை எவ்வாறு வருணிப்பது' என்று லியோனார்டோ டாவின்சி வியப்புடன் கூறினார். மதக்கொள்கை, இதில் படைப்பின நோக்கம் உறுதி செய்யப்படுவதைக் கண்டது.

ஆயினும் உலகில் தீமைகள் இருந்து வருவது ஒரு முரண்பாட்டை ஏற்படுத்தியுள்ளது எனவே அதை மறைப்பதற்கும் நீக்குவதற்கும ஞாயப்படுத்துவதற்கும் மதம், இறப்பிற்குப் பின்னுள் ஒரு வாழ்க்கை உண்டென்றும், அதுபற்றிய கட்டுக் கதைகளையும் கூறவேண்டியிருந்தது.

படிநிலை வளர்ச்சிக் கருத்துகள் வெற்றியடைந்த பின்னர், உலகளாவிய ஒத்திசைவுக் கொள்கை, ஒரு புதிய, மிகவும் அறிவியலடிப்படையிலான விளக்கத்தைப் பெற்றது. 'மாந்தன் இயற்கையின் ஒரு கூறே. அவன் அவ்வாறாகத் தோன்றி, அவ்வியற்கையின் நெறிகளைத் தன்வயப்படுத்திக் கொண்டான் என்பது அது மேலும் வளர்ந்த படிநிலை வளர்ச்சியில், அவனுக்கு அழகியல் உணர்வு உருப்பெற்று வளர்ந்து - அவன் அந்த இயற்கையின் நுட்பங்களை, அழகை, வெளிப்பாட்டை, பயன்களை நுகர்ச்சி பெறத் தொடங்கி ஒருவகை ஒன்றிப்பு உணர்வைத் துய்ப்புணர்வை வளர்த்துக் கொண்டான். எனவே அவனே இயற்கையாயும் இயற்கையே அவனாகவும் இருப்பதை உணர்ந்தான் இந்நிலை அவன் உயிர் வாழ்வதற்கு உதவியது.

ஒரு சில பத்தாண்டுகளுக்கு முன்னால், வேதியியலாளர்கள், பெரும்புடவி (பிரபஞ்சங்)களின் முழுக் குடும்பம் பற்றி ஒப்பீட்டாய்வுகளைத் தொடங்கிய பொழுது, இவ்வாறு உலக அனைத்துப் பொருள்களிலும் ஓர் ஒத்திசைவு இருப்பதாகத் தோன்றுவதற்கு, ஓர் உண்மையான, ஆனால் அளவியல் முறையிலான ஓர் அடிப்படை உண்டு என்று நிலைநாட்டப் பெற்றது. ஒப்பீட்டாராய்ச்சியின் முடிவில் அவர்களுக்கு ஒரு

முகாமையான முடிவு தெரிந்தது. இந்தப் புடவி முழுவதும், அதனுடைய கட்டமைப்பு, உறுப்புப் பகுதிகள், அணுவின் நடுக்கரு, அணுக்கள், விண்மீன்கள் அல்லது விண்மீன் கூட்டங்கள் அனைத்தும் நிலையான பொருள்களின் ஓர் அரிய இணைப்பைக் கொண்டுள்ளன. அந்த இணைப்பே இங்கு மாந்தர்கள் தோன்றுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியது. மதச்சார்பான, மாந்தனை நடுவாகக் கொண்ட போக்குக்கு எதிரான போராட்டத்தில் அறிவியல் ஒரு நீண்ட பாதையைக் கடந்து வந்துள்ளது. அது மாந்தனை நடுவாகக் கொண்ட போக்குடன், தொடர்பான உலகத்தை நடுவாகக் கொண்ட கோட்பாட்டையும், கதிரவனை நடுவாகக் கொண்ட கோட்பாட்டையும் புறந்தள்ளியது.

தற்பொழுது மாந்தன் மீண்டும் பெரும்புடவியின் நடுவில் வைக்கப் பெற்றிருக்கின்றான். ஏனெனில் இயற்கையினது நெறிகளின் கட்டமைப்பே அது. இந்நிலைகளையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கையில், இவ்வுலகம் மாந்தனது வாழ்வுக்காகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது போலத் தோன்றுகிறது. இங்குதான் இறைமையியல் மீண்டும் அறிவியலுக்கு ஒரு சூளுரை விடுப்பது போல் உள்ளது. உலகம் தற்போதுள்ளபடி எவ்வாறு திட்டவட்டமாக அவ்வாறு ஆயிற்று என்பதை அறிவியலாளர்கள்தாம் - விளக்குதல் வேண்டும். இத்தனைக்கும் உள்ள மூலக் கோட்பாடு எது?

வாழ்வியல் நெறிகளின் வியப்புக்குரிய அமைப்பைப் புரிந்து கொள்வதற்கு நமக்கு வகைசெய்கின்ற அளவை முறையான தேவைகள் எவை என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

உலகம் ஏன் இருக்கிறது, இருந்து வருகிறது என்ற இன்னும் உயர் அளவை முறையில் ஒரு கேள்வியைக் கேட்டால், அதற்கான விடை ஒருவேளை கிடைக்கக் கூடியதாக இருக்கலாம். இதற்கு கருத்து வேறுபாடுகளற்ற ஒரே விடை, ஒரு பொருளில், உலகம் இருந்து வரவில்லை என்பதே ஆகும்: அஃது ஒன்றுமில்லாததற்குச் சமமான விடையே! 'அ'விலிருந்து 'ஆ' தோன்றியது என்று நாம் கூறினால், அந்த 'அ' எங்கிருந்து தோன்றியது என்னும் கேள்விக்கும் நாம் விடையளிக்க வேண்டிவரும். ஆனால் இத்தகைய கேள்விகள் முடிவற்றனவாகவே இருக்கும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

எல்லாமே வெறுமையில் (பாழில்-சூனியத்தில்) இருந்து தோன்றின என்பது ஒரு பழைய கருத்தாகும். படிப்படியாக இந்தக் கருத்து, மத உள்ளடக்கத்திலிருந்து வெளியே வந்தது. பண்டைய வேதங்களில், 'தொடக்கத்தில் இவை எதுவும் இருக்கவில்லை. எனவே, இந்த வெறுமை நிலை என்பது என்ன

என்னும் கேள்வி எழுகிறது' - என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. கி.பி. 5-ஆம் நூற்றாண்டில், புனித அகசுடீன், "வெறுமையிலிருந்து உண்டாக்கப்படக்கூடிய இந்த உலகம் முழு நிறைவுடையதாகும்" என்று முன்னறிவிப்பாக (தீர்க்க தரிசனமாக)க் கூறினார். பெரும்புடவியின் அனைத்து அளவை (தருக்க) முறையிலான அடிப்படைகளையும் தொகுத்துக் கூறினால், இதன் முடிவு சுன்னம் - சுழியம் - (பூஜ்யம்) ஆகும்.

இன்று இந்த உன்னிப்பு (ஊகம்), ஏற்கனவே கிடைக்கின்ற இயல்பியல் - வேதியல் - மெய்ம்மங்களின் அடிப்படையில்- இதுவரையிலும் உறுதியாக நிலைநாட்டப்பெற்ற கருத்தமைப்புகள் இல்லாவிடினும் - தீவிரமாக ஆராயப்பெற்று- கருத்தாய்வு செய்யப் பெற்று வருகிறது. பல்வேறு வரையறுப்புகள் இல்லையே. எடுத்துக் காட்டாக, சோவியத்துப் பேரவையாளர் சி.ஐ. நான் என்பார் 'வெறுமை எதையும் தோற்றுவிக்க முடியும். ஏதாவதொன்றுக்கு எதிரானதையும் தோற்றுவிக்க முடியும்' என்று கூறுகிறார்.

தற்செயல் நிகழ்வின் உறுப்பு தொடர்ந்து அதிகமாகவே இருக்கும். எடுத்துக்காட்டாக, உயிர் தோன்றுவதற்கு அளபுருக்களின் மிகவும் அரிதான சேர்மானத்துடன் கூடிய ஒரு கோள் தேவைப்பட்டது. இந்தச் சேர்மானமும் தற்செயலாகவே காணப்பட்டது. ஆனால், பகுத்தறிவு தோன்றுவதற்கு இன்றியமையாத முன்தேவையாகிய அறிவுக் கூறுகளின் ஒழுங்கமைப்பு இயல் ஒரு முறையான இயல்பாகும். இங்குதான் இயற்கையின் எளிமைக்கும், உணர்ந்தறிந்து கொள்வதற்குமான ஒரு தீர்வு அடங்கியுள்ளது. இயற்கையின் ஒழுங்குமுறையான ஒத்திசைவை உணர்கிற அழகியல் உணர்வு, அதனுடைய நெறிகளைக் கண்டுபிடிப்பதற்கு ஏன் உதவுகிறது என்பதும் புரிந்து கொள்ளத் தக்கதாகிறது.

முதலாவது, பருப்பொருள் சார்ந்த உண்மையையும், பின்னர் - ஒரு புதிய மட்டத்தில் - உயிர் தோன்றியதையும், ஒரே நெறிகளின் அமைப்பு உறுதி செய்தது என்பதை நாம் உய்த்துணர்ந்தால், இந்த உலகில் நாம் இருந்து வருவதற்கு, மாந்தனை நடுவாகக் கொள்ளும் கோட்பாட்டினால் விளங்கிக் கொள்ளப்பட்டதைக் காட்டிலும், ஒரு கூடுதல் இயல்பான காரணம் காணக் கிடைக்கிறது. அக்கால் இயற்கையுடன் நமது ஒற்றுமை மேலும் ஆழமுடையதாகிறது.

ஒருவேளை, இப் பெரும்புடவி படிப்படியாகத் தன்னை ஒருங்கமைத்துக் கொள்வதாக இருக்கக்கூடும். ஒவ்வொரு சுழற்சியுடனும் அதுமேலும் மேலும் பொருட்செறிவுள்ளதாகிறது. கடந்த காலத்தில் அடையப் பெற்றது இழக்கப்

(தொடர்ச்சி 16-ஆம் பக்கம்)

தமிழ்ப் பறவைகளே!

—பறம்பை அறிவன்

'காக்கை, குருவி எங்கள் சாதி' என்றனர். நாம் தமிழர் இந்தச் சாதிக்குள்ளேயே ஆயிரம் வேற்றுமைகள் காரணம் என்ன? நாம் தமிழால் ஒன்று என்ற உண்மையை உணராதவர்களாக உள்ளோம். பழைய காட்டு விலங் காண்டிக் கொள்கைகளை நாம் தெரிந்து அவற்றை முறி யடிக்க வேண்டும். அதற்காக நாம் நிரம்பக் கற்கவேண்டும், 'கற்க' என்ற முதல் மந்திரத்தை நாம் ஏற்றுச் செயல் படுதல் வேண்டும்.

கற்பதில் நமது அறிவும், ஆற்றலும் வளரும்; தெளிவு தோன்றும்; உண்மைகள் விளங்கும். ஆகவே, முதற்படியாக நாம் படிப்போம் கற்போம்.

பறவைகள் நாம். பறப்போம், எல்லைகளைத் தாண்டியும் பறப்போம். ஆனால், நாம் தங்க வேண்டிய தாய் வீட்டைத் தேடித் திருப்பி விடுவோம். ஏனெனில், அது நம் வாழ்க்கை. வாழ்க்கையை விட்டு விட்டுப் பறத்தல் இயலாது. பறப்பது வாழ்க்கையின் பொருட்டே அந்த இயல்பிலிருந்து நாம் விலகி நிற்க முடியாதல்லவா?

பறக்கின்ற நம் மீது பலரின் கவனம் பாயும். அவர்களில் நண்பரும் பகைவரும் இருக்கலாம் ஆனாலும், பறப்போம், அவர்கள் கண்ணில் ஒளியும், கரவும் மாறி மாறித் தோன்று தல் கூடும். அமபும், துவக்கும், கல்லும், கட்டையும் நம் மீது பாயக்கூடும். ஆனால் பறப்பதை நாம் கைவிட முடி யாது பறவைகள் நாம. தமிழர்கள் நாம் நம் தாயை, மொழியை, இயல்பை, விட்டுவிடச் சொல்லும் உரிமை அவற்றைத் தடுக்கும் ஆற்றல் எவருக்கும் இல்லை!

திசை தவறிய பறவைகளை நாம் நம் திசைக்கு அழைத்து வருவோம் மேற்குத் திசையிலிருந்து கிழக்கே நோககிப் படை யெடுக்கும் பறவைகளை நம் 'பறவைப்படை' முறி யடிக்கும் நம் காடு கழனிகளை அவை அழிவு செய்யாமல் தடுப்போம்.

வாழ்க்கை இது. நேற்றும் நாளையும் குறித்து தமிழ்ப் பறவைகளே நமது 'பறத்தலை'த் தள்ளிப் போட்டு விடா தீர்கள் நாம் 'பறவை' பிணங்கள் அல்ல!! பறவைகளே, கடலின் பரப்பைப் பாருங்கள் வானிலே உங்களின் வரம்பு தெரியாமல் போகும். ஆனால் உங்கள் இயக்கம் எதை நோக்கி என்பதை அறிவர்கள். வேடன் தங்கலை நாடி வரும் உங்களுக்குத் 'திசை' தெரியாது திருப்பி வர என்று எவரேனும் சொல்லக் கூடும் பறந்து செல்லுங்கள் உங்கள் 'பாதை' தெரியும் தாய்மண் உங்களைத் திரும்ப அழைப் பதை உங்கள் உடம்புச் சூட்டில் காண்பீர்கள்!

தமிழ்ப்பறவைகள் என்று இனம் பிரிக்கலாமா என்று தேசியம் தெரியாத 'பிள்ளைப் பறவைகள்' கூறலாம் சில 'பெரிய' இனப்பறவைகள் உங்களை வேட்டையாட விரும்பிப் பேசலாம். இனம் பிரிப்போம். ஏனெனில், நாம் 'இனம்' தெளிந்தவர்கள். வாழ்வின் பொருள் புரிந்தவர்கள். ஏமாற்றும், கரவும் அறியாத தமிழினம் வாழ அதன் 'இன வாழ்க்கை' 'கூட்டுச்சிந்தனை'யை இழந்து விடுதல், அதன் அழிவில் முடியும்!

தமிழினம் அழிந்து ஒரு புதிய இனம் பிறக்கும் என்றால், அது தமிழினம்தான். அதன் அழிவில் அதன் புத்துயிர்ப் பிருக்கும்; எழுச்சியிருக்கும். அதன் முடிவில் தொடக்க மிருக்கும்.

பறவைகளே, தமிழ்ப் பறவைகளே,
பறந்து செல்லுங்கள்... உங்களை
எந்தப் பாயும் அம்பும் தடுத்து விட முடியாது!
ஒழித்துவிட முடியாது. ஏனெனில்,
நீங்கள் 'உலக இனம்' எதையும்
எதிர்பார்த்து உண்மையைப் பாடவில்லை...
அப்பாடலிசையில் 'தமிழினம்' தன்னை
மறந்து விடலாம்; அதனால் 'தமிழினம்'
இல்லை என்று பொருளில்லையே!
எல்லையற்ற வான், தமிழ்ப்பறவையே,
நீ பறப்பதற்காகத்தான்; பற; பற!

'தமிழ்ச்சிட்டு' இதழை நீங்கள் புரட்டிப் பாருங்கள். அந்த ஒளி மணியை உண்டு மகிழுங்கள். உங்கள் பறத்தல் மேலும் தொடர அது துணிவைத் தரும்; ஆற்றலைத் தூண்டும்!

தமிழ்ப் பறவைகளை இணைக்கும், அழைக்கும் அப்புதிய புதிய ஒளிமணிகளை உண்ணத் 'தமிழ்ச்சிட்டு' களாகுங்கள்! உங்கள் 'கனம்' குறையும். 'இனம்' வளரும்; செலவு தொடரும். சிந்தனை மலரும்.

'உறுதி மொழி' எடுத்த பிறகே 'பறப்போம்' என்கிறீர்கள். யாருக்காக நீங்கள் உறுதிமொழி எடுக்கவேண்டும். உங்கள் 'வாழ்க்கை'காக நீங்கள் யாரிடம் 'உறுதிமொழி' எடுக்கப் போகின்றீர்கள்? நீங்கள் பறப்பதானால் என் பேச்சும் தேவையோ? கிளையில் அமர்வதானால், கேளுங்கள். அப்போதும், நீங்களே இசைக்க வேண்டும். உங்கள் பாட்டு நமது பாட்டு. நமக்குக் கிளர்ச்சி தரும். நாம் எடுக்கும் உறுதிப்பாடு, நாம் பாடும் பாட்டே. பறக்கிற நாம், பாடும் பாட்டு ஓய்வில்லாது வானிலே கேட்கும். அந்த இசை வெள்ளத்தில் நீந்துகிற-பறக்கிற நீ.. யாருக்காக உறுதி மொழி சொல்லிப் பறக்கப் போகிறாய்? விழிப்பாய் இருக்கிற உன்னை எவராலும் விழுங்கி விட முடியாது. நீ தூங்குவதும் விழித்திருப்பதும் வாழ்க்கைக்காகவே! o

உணர்வுகளும், உணர்ச்சிகளும்!

—அதியமான்

ஐம்புலன்கள் வழி நுகர்ந்து அடங்கிக் கிடப்பது உணர்வு. ஐம்புலன்களின் வழித் தூண்டப்படுவதால் வெளிப்படுவது உணர்ச்சி. இவ்வுணர்வுகளே, மாந்தர்களை மட்டுமன்று உயிரினங்களையும் வழிப்படுத்தும் சிறந்த இயங்கி. இவ்வுணர்வுகளை மழுங்கடிப்பது கோழைக் குணம். நுகரறிவால் பெற்ற உணர்வுகள் அமிழ்ந்து கிடக்கும். அவ்வுணர்வுகள் வெளிப்படும்போது, அவை உணர்ச்சிகளாகவே வெளிப்படும். உணர்ச்சியின் மூலத்தை அறியாது அவற்றைத் தடுக்க, அடக்க, ஒடுக்க, மடக்க எண்ணினுல், காட்டாற்று வெள்ளம் போன்று பாய்ந்து பல இடையூற்றைச் செய்துவிடும்; எனவே மூலத்தை அறிந்து முடித்து வைத்தலே சிக்கல் தோன்ருமல் இருக்க வழி.

ஒரு முதலாளியிடம் இருவர் வேலைக்கு அமருகிருர்கள்; ஒருவன் முதலாளியின் சொந்தச் சாதியானென்பதற்காக உருபாய் நூறு கூடுதல் சம்பளம். இன்னெருவன் அதே தகுதி பெற்றவனுனலும் சாதியின் வேற்றுமையால் உருபாய் நூறு குறைந்த சம்பளம். இப்போது சாதி வேற்றுமையின் கொடுமையை உணருகிருன். அக் கொடுமையின் செயலால் உந்தப்படுகிருன். சாதியை எதிர்க்கிருன். வேற்றுமையை எதிர்ப்பவனை ஒருமை, ஒற்றுமை என ஏமாற்றிக் கொடுமையை எதிர்ப்பவனை வன்முறையாளன், பிரிவினையாளன் என்ருல் வல்லாளுமையன்ரே? வன்முறை எழுச்சி, எழா விட்டால் சாதி எப்படி ஒழியும்?

உணர்வுகளை உணர்ச்சிப்பட எழ வைப்பது எதிரில் நின்று ஆராயாமல் பேசுவதாலேயே வருவன. எனவே சொல்லுஞ் சொல்லை முன்பின் வரும் விளைவுகளை ஆய்ந்து கூறுவதே நல்லது. அதனுலேயே வள்ளுவம்

''ஆக்கமும் கேடும் அதனுல் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு''

(குறள் : 642)

எனக் கூறுகின்றது. ஒவ்வொருவர் கூறுஞ் சொல்லே ஆக்கத்தையும் கேட்டையும் தரும். எனவே சொற்களைக் கேட்டு ஓம்புதல் வேண்டுமென அறிவுறுத்துகிருர் நம் பேராசான். எங்கேயாவது ஒரு தீச் செயல் நடைபெற்றதின் கரணியத்தை ஆய்ந்து, அத்தீச் செயலேன் ஏற்பட்டதெனப் பார்த்தால் அதனுடைய தொடக்கம் வாய்ச் சொல்லின் வன்மையாலேயே வந்திருக்கும் எதை வேண்டுமானுலும் சொல்லலாமென்ருல் எதுவேண்டுமானுலும் நடக்கும். அதனுலேயே வெல்லுஞ் சொல்லறிந்து பேசவேண்டும்.

உலகமாந்தர்களுக்கு உயர்வைத் தருவது மானம், மதிப்பு, புகழ்ச்சி, நேர்மை, ஞாயம், உண்மை, செம்மை, ஒழுக்கம் ஆகிய இவை போன்ற பண்புகளாகும். இவற்றுக்கு இழுக்குவர, எங்கேனும் எவரானும் நடந்தால் உணர்வுகள் தூண்டப்பட்டு உணர்ச்சி பொங்கி விடும். அதனுல் வன்முறை தலைநிமிர்ந்து விடும். கோவலனை பாண்டியன் நெடுஞ்செழியன் கள்வன் என்று கொலையுண்ணச் செய்தான். கண்ணகி வன்முறையிலிறங்கினுள். மதுரையை அழித்தாள். இதற்காகக் கண்ணகியை வன்முறை செய்தவள் எனக் கூறலாமா இதற்குக் கரணியமாக இருந்து கண்ணகியின் உணர்வுகளை உணர்ச்சிகளாகப் பொங்க வைத்தது பாண்டியனின் செயல். எனவே அவனே மாண்டான். அக்காலத்தில் ஞாயம் அனைவராலும் கடைப்பிடிக்கப்பட்டது. அதனுல் ஞாயம் தவறி உணர்ச்சியை எழுப்பியதற்காகப் பாண்டியனே மாள வேண்டியதாயிற்று இப்படித்தான் ஒவ்வொரு வன்முறையும் நிகழ்கின்றது. எனவே வன்முறைக்கு மூல கரணியம் என்னவென்று ஆய்ந்து பார்த்தே வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். அதுவன்றி வன்முறையை மட்டும் அடக்கும் ஆணவ அதிகாரம் மாந்தனுடைய உணர்வுகளை உணர்ச்சிகளாகப் பொங்கவைத்துப்பின் அதை அடக்க முற்படுவது அறியாமை. தன்னுடைய உயர்விற்குக் கரணியமாக உள்ள குணநலங்களுக்கு எவ்வழியேனும் இழிவு வந்தால் வன்முறை கொண்டு காத்துக் கொள்வது இயல்பேயாகும். ஒவ்வொரு வன்முறை நிகழ்ச்சியின் கரணியங்களையும் நுண்ணுய்ந்தால் தெளிவு கிடைக்கும்.

'மானம் போனபின் வாழாமை முன் இனிதே' என தமிழ்மறை கூறுவது இதனுலேயே! மானம் போக வாழ்வதைவிட மானத்தைக் காப்பதற்காக உயிரைவிடலே மேலாம். உயிரைக் கொடுத்து உயிரை எடுத்து மானங்காப்பதும் நிகழக் கூடியதே. இதுவே தமிழர்களுடைய மேன்மையான குணம்!! ○

பிழை திருத்தம்

இவ்விதழ் அட்டை 4-ஆம் பக்கம் வெளியாகியுள்ள அழகுவேலன் பாட்டில் இறுதி அடியில் உள்ள முதல்சீர் சில படிகளில் 'தமிழினதின்' என்று அச்சாகி உள்ளதைத் 'தமிழினத்தின்' என்று திருத்திப் படிக்கவும்.

முத்து மொழிகள்!

ஃ உன் சொற்கள் எப்படி இருக்கின்றன என்பது பற்றி யாரும் கவனம் செலுத்துவதில்லை. உன் நடத்தை எப்படி உள்ளது என்பது பற்றியே அனைவரும் கவனம் செலுத்துவர்.

ஃ உன் வாயிலிருந்து தவறான சொற்கள் வருகின்றன என்றால், உன் மூளை எப்படியிருக்கும் என்று எண்ணிப் பார்.

ஃ இறப்புக்காக அஞ்சுகிறவன், வாழ்க்கை என்ன என்பதைச் சரியாக விளங்கிக் கொள்ளாதவன்.

ஃ உன் உரிமைகளைப் பேசுவதற்கு முன் நீ சரியாக இருக்கிறாயா என்பதை எண்ணு!

ஃ கடினமான சிக்கலைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கிறவன் அதற்குச் சரியான தீர்வைக் காண்பான்.

ஃ காலம் என்பது வாழ்க்கை. காலத்தை வீணாக்குகிறவன் வாழ்க்கையை வீணாக்குகிறான்.

ஃ நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள். தீய நூல்கள் நம் மனத்தையும் போக்கையும் தீமைக்கே கொண்டு செலுத்துகின்றன,

ஃ கடினமான சிக்கல்கள் தீர்ப்பதற்கு எவ்வளவு தொல்லைகளைத் தந்தாலும், அவை உனக்கு வைக்கப் பெறும் தேர்வுகள் என்று எண்ணு! அவற்றில் நீ வெற்றி பெறுதல் வேண்டும்.

(11-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு விடவில்லை. மாறாக, அது ஒரு புதிய சிக்கலுக்கான ஒரு தொடக்கமாகிறது. அது தொடக்க நிலைமைகளிலான பெரும் புடவியின் 'உயிரணுக்களை' எதிரொலிக்கிறது. புலனங்களைச் சேமித்து வைப்பதன், மற்றும் அவற்றை - மாற்றிக் கொ(ட்)ப் பதன் மூலமான இத்தகைய தன்னளவில் முழுநிறைவு அடைதல், உயிரியல் படிநிலை வளர்ச்சியை ஒத்ததாக இருக்கும்

இதுவரையிலும் இது தெரியாத ஒன்றாகும். ஆனால் 20-ஆம் நூற்றாண்டின் இறுதியில், அறிவியல சிந்தனையின் முதிர்ச்சியை இது காட்டுகிறது. அதன்பின் இதற்கு அப்பாற் பட்ட பல வினாக்கள் கேட்கப்பட்டுள்ளன.

—(சோவியத்துப் பலகணியில் வெளியான கருத்துகளை அடிப்படையாகக் கொண்டது இக்கட்டுரை)

தமிழ் மொழியில் எழுத்துப் பிறக்கும் வகைகள்:

1

1. இதழ்களில் பிறக்கும் எழுத்துக்கள். (labials): ப வ ம
2. பற்களைத் தொட்டுப் பிறக்கும் எழுத்துகள்: (dentals): ந த
3. முன் அண்ணத்தைத் தொட்டுப் பிறக்கும் எழுத்துகள்: (Palatals): ச ஞ ய
4. பின் அண்ணத்தைத் தொட்டுப் பிறக்கும் எழுத்துகள்: (Velar Sounds): க ங
5. உள் நாக்கில் பிறக்கும் எழுத்துகள் (Uvular Sounds): ர ழ
6. நாக்கை வளைத்துப் பிறக்கும் எழுத்துகள்: (cacuminals): ட ண ள

அது போலவே, காற்றை வெளிபடுத்தும் வகைகளில் பிறக்கும் எழுத்துகள்:

1. வெடியினம் (Plosives)—
   மூச்சுத் தடைப்பட்டு வெடிப்பு ஒலியாக வரும் எழுத்துகள்: க ச ட த ப ற
2. மூக்கொலியினம் (nasals)—
   மூக்கு வழியாகக் காற்று வெளிப்படுதலால் வரும் எழுத்துகள்: ங ஞ ண ந ம ன
3. பிரிவளியினம். (laterals)—
   வாயிடையே மூச்சை நாக்குத் தடுத்துப் பிரித்து வெளிப் படுத்தலால் வரும் எழுத்துகள்: ல ள
4. உரப்பொலியினம். (trilled or rolled consonants)—
   இர்ர் போன்ற ஒருவகை உரசல் ஒலியால் வரும் எழுத்துகள்: ற
5. உயிர்ப்பினம் (Fricative)—
   'உஸ்' போன்ற ஒலிகள் தமிழில் இல்லை.
6. அரையுயிர் (Semi—Vowels)—
   உயிருமின்றி மெய்யுமின்றி இடையினமாக வரும் எழுத்துகள்: ய வ

(அட்டை 2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகப் புள்ளி விளக்கங்கள் கூறுகின்றன: 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஆனந்த விகடன் இதழுக்கு 3,00,000 வாசகர்கள் இருந்தார்கள். இன்று 2,70,000 பேர்களே உள்ளனர். அதே போல் குமுதம் இதழைப் படிப்பவர்கள் 6,00,000 பேர் இருந்தனர். இப்பொழுது 4,60,000 பேர்களே குமுதத்தைப்படிக்கின்றனர்.

ஃ உலகில் உள்ள அனைத்து மோதல்களுக்கும் காரணம் உலகிலுள்ள பல பல துறை ஆளுமையர்களே. ஒவ்வொரு ஆளுமையரும், 'தான் நினைப்பதுதான் சரி; மற்றொரு ஆளுமையர் நினைப்பது சரியில்லை' என்று எண்ணுவதால் வரும் மோதல்களே உலகிலுள்ள அனைத்து மோதல்களுக்கும் காரணம்.

இன நலங் காக்க வேண்டும்!

— அழகுநிலவன்

நல்லதையே உன்மனம் நாடவேண்டும்—தமிழ்
நாட்டின் சிறப்பையே பாடவேண்டும்!
இல்லையெனக் கேட்போருக்(கு) உதவவேண்டும்—பிறர்
இன்னல் கண்டு உன்நெஞ்சம் கலங்கவேண்டும்!

நல்ல நல்ல நூல்களையே படிக்க வேண்டும்—நீ
நாள்தோறும் முன்னேறத் துடிக்கவேண்டும்!
சொல்லாலும் செயலாலும் உழைக்கவேண்டும்—நீ
சோம்பலையே நீக்கிவிட்டுத் தழைக்கவேண்டும்!

கற்றோரைத் துணையாகக் கொள்ளவேண்டும்—உன்
கண்களிலே என்றையுமே கனிவுவேண்டும்!
பெற்றோரை—பெரியோரை மதிக்கவேண்டும்—உன்
பேச்சினிலே தூயதமிழ் மணக்கவேண்டும்!

எண்ணத்தில் எப்போதும் தெளிவுவேண்டும்—நீ
இயற்கையினை மிகப்படித்து மகிழவேண்டும்!
உண்மையினை நீ, எடுத்துச் சொல்ல வேண்டும்—இந்த
உலகத்தின் போக்கினை நீ அறியவேண்டும்!

உடலினை நீ, நன்றாகப் பேணவேண்டும்—உன்
உள்ளத்தில் உயர்வினையே எண்ணவேண்டும்!
கடமையினில் நீ, சிறந்து விளங்கவேண்டும்—இக்
காலத்தின் அருமையினை உணரவேண்டும்!

உடையினை நீமுறையாக அணியவேண்டும்—நீ
ஊருக்கே உழைத்திடவும் துணியவேண்டும்!
தடைகளையே உடைத்தெறிந்து முனையவேண்டும்—நம்
தமிழினதின் முன்னேற்றம் காக்கவேண்டும்!

சில பயனுள்ள மருத்துவக் குறிப்புகள்!

- வல்லாரைக் கீரையை நாள்தோறும் சாப்பிட்டு வந்தால் திக்குவாய் குணமாகி விடுகிறது என்று மேல் நாட்டு மருத்துவ அறிஞர் ஒருவர் கூறுகிறார்.
- எட்டுத் திப்பிலி ஈரைந்து சீரகம்
  சுட்டுத் தேனில் கலந்துண்ண விக்கலும்
  கெட்டுப் போகும் கெடாவிடில் பொத்தகம்
  சுட்டுப் போடுநான் தேரையன் அல்லனே! —தேரையர்.
- பப்பாளிப் பழத்தை நாள் தோறும் சாப்பிட்டு வந்தால் நீரிழிவு நோய் குணமாகி விடும். இதில் உடலுக்கு வேண்டிய ஊட்டச் சாரங்களும் நிறைய உள்ளன.
- கண்ணாடி வளையல்களை அணிய விரும்புகிறவர்கள் அவற்றைக் கொஞ்சம் தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்த பின் எடுத்து ஆறவிட்டு அணிந்து கொண்டால் அவை உடையா.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)